மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(இ) தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2023), மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2023)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய தேர்தல் வாக்குறுதியில் இடம் பெற்று, மாண்புமிகு இளைஞரணிச் செயலாளர் அவர்களால் முன்மொழியப் பெற்ற அதிமுக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சினை இந்தச் சட்டத்தில் இருக்கிறது. இந்தச் சட்டத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்றால், எந்தவொரு

@13—1—2023 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2023 ஜனவரி 13] [திரு. தி. வேல்முருகன்]

பதவிக்கும் விண்ணப்பிக்கும் நபர் எவரும் ஆட்சேர்ப்பிற்காக நடத்தப்படும் தேர்வில் தமிழ் மொழித் தாளில் 40 விழுக்காட்டிற்குக் குறையாமல் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெறுதல் வேண்டும். கடந்தகால அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 2011–ல் இந்திய நாட்டைச் சார்ந்த யார் வேண்டுமானாலும் தேர்வில் கலந்துகொண்டு, வெற்றி பெற்றால், அவர்களுக்குப் பணி வழங்கலாம். இரண்டாண்டுகள் கழித்து அவர்கள் தமிழில் தேர்ச்சி பெற்றால் போதும்; தமிழில் எழுதப் படிக்கத் தெரிந்தால் போதும் என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அப்படி எந்த நபர் வேண்டுமானாலும் தேர்வு எழுதலாம் என்றால், நான் சொல்கிறேன், பீகார், உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் மற்றும் அண்டை மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாட்டில் வந்து தேர்வு எழுதி, அதில் தேர்ச்சி பெற்றால், இந்தப் பணிகள் அவர்களுக்குக் கிடைப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. இதற்கு முன்னுதாரணமாகத்தான், கடந்த ஆட்சியில், மின்சாரத் துறையில் நூற்றுக்கணக்கான வெளி மாநிலத்தவர்கள் இங்கு உயரதிகாரிகளாகப் பொறுப்பேற்றிருக்கின்றார்கள். இதே சட்டம், குஜராத், தெலுங்கானா, கர்நாடகா, மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் இருக்கின்றன. அங்கெல்லாம், அந்த மாநில மக்களின் குடியானவர்கள், அந்த மாநிலங்களில் நிரந்தரமாகக் குடியிருக்கக்கூடியவர்கள், அந்த மொழிவழி தேசிய இனங்களைக் கொண்டவர்கள் என்று சட்டத் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

ஆனால், தமிழ்நாட்டில் எந்த நபர் வேண்டுமானாலும் தேர்வு எழுதலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால், இந்தி மொழி பேசும் ஒருவர், தமிழ்நாட்டிற்கு வந்து 10 நாட்களில் தமிழ் பேசக் கற்றுக்கொண்டு, T.N.P.S.C. தேர்வெழுதி, தேர்ச்சி பெற்று எல்லா பதவிகளையும் அவர்கள் கைப்பற்றிக்கொண்டார்கள் என்றால், தமிழ்நாட்டில் வாழ்கின்ற, மொழிவழி தேசிய இனங்களை உள்ளடக்கிய பூர்வகுடி தமிழ் மக்கள் மீண்டும் வேலைவாய்ப்பை இழக்கின்ற பேரபாயம் இருக்கின்றது. இதை வேண்டுமென்றே, வட மாநிலத்தவர்களின் ஆதிக்கத்திலும், பிற மாநிலங்களுடைய ஆதிக்கத்திலும் இருக்கின்ற அரசு உயரதிகாரிகள் நம்முடைய அரசின் கண்ணில் மண்ணைத் தூவிவிட்டு, இதுபோன்ற இடைச்செருகலான பல பணிகளைச் செய்து, அனைத்துத் துறைகளிலும் நீக்கமற தமிழ்நாட்டைச் சார்ந்த பூர்வகுடி மக்களின் வேலைவாய்ப்பு உரிமையைப் பறித்துக் கொண்டிருக்கிறார்கள்.

[திரு. தி. வேல்முருகன்] [2023 ஜனவரி 13

ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் அதிக கவனம் எடுத்துக்கொண்டு, இந்த மண்ணைச் சார்ந்த, தமிழ்நாட்டைத் தாயகமாகக் கொண்ட இந்த மண்ணின் பூர்வகுடி மக்களுக்குத்தான் தமிழ்நாடு அரசுப் பதவிகள் 100 சதவிகிதம் கிடைக்க வேண்டும். அதில், ஏனைய மொழி சிறுபான்மையினராக இருக்கக்கூடியவர்கள் 1956-ல் மொழிவழி மாநிலங்கள் பிரிக்கப்பட்ட பிறகும், அதற்கு முன்பும் ஆண்டாண்டு காலமாக இந்த மண்ணில் வாழக்கூடியவர்கள் என்கிற அடிப்படையில் இந்த சட்டத் திருத்தம் செய்யப்பட்டால் மட்டும்தான் தமிழர்களுக்கும், திராவிடக் கொள்கையைப் பின்பற்றுகின்ற சமூக நீதி ஆட்சிக்கும் நற்பெயர் ஏற்படும். இல்லையென்றால், இது பெரும் பேரபாயத்தை நோக்கி, இன்றைக்கு வடநாட்டுக்காரர்களுக்கு வழியைத் திறந்துவிடுகின்ற ஒரு பகுதியாக தமிழகம் மாறிவிடக் கூடாது என்கிற என்னுடைய கவலையைத் தெரிவித்து, இந்தக் கோரிக்கையின் அடிப்படையில் முன்மொழியப்பட்டிருக்கிற இந்த சட்டத் திருத்தம் மறு ஆய்விற்கு உட்படுத்தப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டும் என்கிற காலத்தின் தேவையைப் பதிவு செய்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-40

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு மானியக் கோரிக்கையின்போது இந்த அவையில் இது முன்மொழியப் பெற்று, ஏற்கெனவே அவையின் அனுமதியைப் பெற்று, அதற்கு ஓர் அரசாணை வெளியிடப்பட்டு, அதற்கேற்ப செயல்பட்டு பல தேர்வுகள் பல துறைகளில் நடந்துவிட்டன. இந்தச் சூழ்நிலையில், Medical Services Recruitment Board-ல் தேர்வுக்கான ஒரு announcement வந்தபோது அதே அடிப்படையில் முதலில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல், பழைய சட்டம் என்னவென்றால், ஒன்று தமிழ் தெரிய வேண்டும். தமிழ் தெரியவில்லையென்றால், தேர்வில் தேர்ச்சி பெற்று 2 ஆண்டுகளுக்குள் தமிழைத் தெரிந்துகொண்டோம் என்று இன்னொரு தேர்வில் காண்பிக்க வேண்டும். அதில் பல குளறுபடிகள் நடக்கின்றன என்பதால்தான் முதலில் இதை மாற்றி, தேர்வு எழுதுவதற்கு முன்பே முதல் தாளை தமிழில் எழுதி, அதில் தேர்ச்சி பெற்றால்தான் மற்ற தேர்வுகளை எழுத முடியும் என்று அரசு முடிவு எடுத்து, அரசாணை வெளியிட்டு அது செயல்பாட்டில் இருந்தது. (குறுக்கீடு) ஒன்று, அவர் பேச

வேண்டும், இல்லையென்றால் நான் பேசுகிறேன். அவர் பேசுகிறார் என்றால், அவருக்கு மைக் கொடுங்கள். உட்கார்ந்துகொண்டு பேசுவது மரபல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்கார்ந்துகொண்டே கேட்கக்கூடாது. அவர் தெளிவாகச் சொல்கிறார். நீங்கள் கேளுங்கள். அரசாணை வெளியிட்டு அதற்குப் பிறகுதான் செயலாக்கத்திற்கு வருகிறது.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: அதனால், Medical Services Recruitment Board என்று வரும்போது, ஒரு நபர் நீதிமன்றத்தை நாடி, அது சட்டத்திற்கு விரோதமானது என்று வழக்குத் தொடர்ந்து, மதுரை கிளை உயர் நீதிமன்றம் அந்தத் தேர்வு அறிவிப்பை இரத்து செய்தது. இது சட்டத்திற்கு கொஞ்சம் வெளியே இருப்பதுபோல் தெரிகிறது என்று, அரசாணையின் செயல்பாட்டை இரத்து செய்ததற்குப் பிறகு, வல்லுநர்களை நாடி இதை எப்படித் திருத்தலாம் என்று ஆய்வு செய்து, அதற்கேற்ப ஏற்கெனவே இருக்கின்ற அரசாணையை திருப்பி நிலைநாட்டும் வகையில், மறுபடியும் நீதிமன்றத்தில் எந்தப் பிரச்சினையும் வராமல் இருப்பதற்காக அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் சட்டமுன்வடிவு மாற்றப்பட்டு, அமைச்சரவையில் வைக்கப்பட்டு அதற்கு ஒப்புதல் பெற்று, இன்றைக்கு அவையில் அறிமுகம் செய்திருக்கிறோம். கூடுதலாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது அவருடைய கோரிக்கை என்றால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் அதை ஆய்வு செய்து, என்ன செய்யலாம் என்று முடிவு செய்வோம். ஏற்கெனவே செயல்பாட்டில் இருந்ததை, அரசாணை வெளியிட்டதை, இரத்து செய்ததை திருத்துவதற்காக இந்தச் சட்டமுன்வடிவை இங்கே அறிமுகம் செய்திருக்கிறோம். இதை நிறைவேற்றுமாறு நான், தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், ஒரு வார்த்தை சொல்கிறேன். இதையும் கேட்டுவிட்டு, பதில் சொல்லுங்கள். அதாவது, ஏற்கெனவே இருந்த அரசாணையில் தமிழ் 2 வருடங்கள் கழித்து படித்தால் போதும் என்றிருந்தது. இப்போது கொண்டு வந்திருக்கக்கூடிய அரசாணையில் முதலில் தமிழ் தேர்வு எழுதி வெற்றி பெற்றால் மட்டும்தான் திரும்ப, TNPSC–தேர்வுக்கு வரமுடியுமென்று திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள். இனிமேல் இதில் உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: இதற்குத்தான் நான் நேற்று பேசியபோதே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், இளைஞரணி செயலாளர் அவர்களுக்கும் நன்றி கூறினேன். இந்த வழக்கை சென்னை உயர் நீதிமன்றத்திலும், மதுரை கிளை உயர் நீதிமன்றத்திலும் போடுவதற்கு காரணமாக இருந்தவன் வேல்முருகன்தான். ஒரு இலட்சம் மக்களைத் திரட்டி, இளைஞர்களைத் திரட்டி போராட்டம் நடத்த வேண்டுமென்று ஆரம்பத்திலிருந்து இந்தப் பிரச்சினையைக் கையில் எடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அழுத்தம் கொடுத்துக்கொண்டிருக்கிறேன்; வேண்டுகோள் வைத்து வருகிறேன். இதைப் பற்றி ஏற்கெனவே விவாதித்திருக்கிறோம், சட்டம் கொண்டு வந்தோம் என்று சொன்னீர்கள். அப்போது நான் மிகவும் தெளிவாகப் பேசியிருக்கிறேன். அன்றைக்கு **அன்றைக்கே அதைக் குறிப்பு எடுத்துக் கொடுத்திருந்தால், இன்றைக்கு நீங்கள் இதில் ஆலோசனை செய்கிறேன் என்று சொல்வதைவிடுத்து, கண்டிப்பாக நீங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்தாலோசித்து ஒரு முடிவு எடுத்திருப்பீர்கள். நான் இன்றைக்கு காலையில்கூட பேசினேன், நேற்று பேசினேன். பெரும்பான்மையாக **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர் அவர்கள் உட்காருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சருடைய செயலாளர்கள் மற்றும் Chief Secretary. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த வார்த்தைகளை நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். நீங்கள் கருத்தைச் சொல்லிவிட்டீர்கள். எல்லோரும் புரிந்துகொண்டார்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாற்றம் செய்திருந்தால் எல்லோருக்குமே நன்மை கிடைத்திருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்காக ** என்ற வார்த்தைகளையெல்லாம், நான் சொன்னது உட்பட, அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிடுகிறேன். (குறுக்கீடு) தெளிவாகப் புரிந்துகொண்டார்கள். அவையே புரிந்துகொண்டது.

திரு. தி. வேல்முருகன்: தகவல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சேரும்; இளைஞரணி செயலாளர் அவர்களைச் சேரும். அதற்காகத்தான் சொல்கிறேன். கடந்த 11 ஆண்டு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

காலமாக பல்லாயிரக்கணக்கான வட மாநிலத்தவர்கள், வேறு மாநிலத்தவர்கள் வேலையில் வந்து உட்கார்ந்துவிட்டார்கள். அதை மாற்றியமைத்த பெருமை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைச் சாரும்; இந்த அமைச்சரவையைச் சாரும். நான் வரவேற்கிறேன். ஆனால், இன்னமும் அதுபோல உள்ளே வருவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. உதாரணமாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வு, அஞ்சல் துறை நடத்தும் தேர்வு, இரயில்வே துறை நடத்தும் தேர்வு ஆகியவற்றின் மூலமாக தேர்ச்சி பெற்றவர்களுக்கு தமிழே பேசத் தெரியவில்லை, படிக்கத் தெரியவில்லை, எழுதத் தெரியவில்லை. ஆனால், 25–க்கு 25 மதிப்பெண் எடுத்து உள்ளே வந்திருக்கிறார்கள். அதற்கும் நான்தான் வழக்கு போட்டு, இரத்து செய்திருக்கிறேன். இங்கே முறைகேடுகள் நடைபெறுகின்றன. அதற்காக ஒரு condition வைக்க வேண்டும் என்பதுதான் எனது வேண்டுகோள். வேறு ஒன்றும் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள். சுருக்கமாகப் பேசுங்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டு இளைஞர்கள் படித்துவிட்டு, வேலைவாய்ப்பு இல்லாமல் ஏறக்குறைய 85 இலட்சம் பேருக்கு மேலே வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து காத்திருக்கிறார்கள். இந்தச் சூழலில், தமிழக அரசு, தமிழில் 6 ஆண்டு காலம் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை என்று சட்டம் கொண்டு வந்திருக்கிறது. இது வரவேற்கக்கூடிய சட்டம். இந்த சட்டம் கொண்டு வந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், தமிழக அரசையும் நான் பாராட்டுகிறேன். மாற்றுக் கருத்து இல்லை.

பிற்பகல் 12–45

அதேநேரத்தில், தனியார் நிறுவனங்களிலும் வேலைவாய்ப்பு இல்லாத சூழலில், 80 விழுக்காடு தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களுக்கு என்று சொல்லப்படுவதும் வரவேற்கக்கூடியது. அதில் மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், தமிழ் எழுத, படிக்கத் தெரிந்தால் போதும்; முதலில் தமிழில் தேர்வெழுதி தேர்ச்சி பெற்ற பிறகு வேலைவாய்ப்பு; 2 ஆண்டுக் காலத்தில் மீண்டும் ஒரு தேர்வு என்றெல்லாம் சொல்வது, வெளிமாநிலத்தவர்களை

[திரு. ஜி.கே. மணி] [2023 ஜனவரி 13

உள்ளே கொண்டு வருவதற்கான ஒரு சூழலாக அமைந்துவிடும். தமிழ்நாட்டில் இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பற்ற ஒரு சூழ்நிலை உருவாகும்.

இன்றைக்கு மத்திய அரசு நிறுவனங்களாக இருக்கக்கூடிய தொடர்வண்டித் துறை (Railway) உள்ளிட்ட பல்வேறு துறைகளில் எங்கு பார்த்தாலும் வட மாநிலங்களைச் சார்ந்தவர்கள்தான் பணியாற்றுகிறார்கள். சாதாரண கிராமப்புற மக்கள், சிறிய railway station-க்கு சென்றால்கூட, பயணச் சீட்டு வாங்குவது முதற்கொண்டு அனைத்திற்கும் இந்தி தெரியாமல் விழிக்க நேரிடுகிறது. இவ்வாறு வட மாநிலங்களைச் சார்ந்தவர்களும், பிற மாநிலங்களைச் சார்ந்தவர்களும் வேலைக்கு வருகின்ற சூழலில், நாம் தொடர்ந்து இத்தகைய சட்டங்களைக் கொண்டு வந்து, வெளி மாநிலத்தவர்கள் வருவதற்கு வழிவகுத்தால், தமிழ்நாட்டில் இருக்கின்ற இளைஞர்கள் கையேந்தி நிற்கக்கூடிய நிலை ஏற்படும் என்கிற காரணத்தால்தான், இந்தச் சட்டத்தை மறு ஆய்வுக்குட்படுத்த வேண்டுமென்றும், மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், தமிழக அரசையும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ் அவர்கள்.

திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. வேல்முருகன் அவர்கள் முன்வைத்த கருத்துகள் மிக மிக உணர்வுபூர்வமானவை. ஒரு வாரத்திற்கு முன்னால், தமிழ்நாட்டில் தமிழ்நாட்டு மக்களைக் கண்டறிவதற்காக 'Makkal ID' என்ற ஒன்று கொடுக்கப்படவுள்ளதாக ஒரு செய்தி வந்தது. அது எப்படிப்பட்ட ID என்ற தகவல் அரசிடமிருந்து அதிகாரபூர்வமாக வரவில்லை. எனினும், அவ்வாறு ஒரு செய்தி வந்ததற்கு மக்களிடம் அப்படி ஒரு வரவேற்பு. ஏனென்றால், இது தேவை; இந்தப் பிரச்சினை மிக முக்கியமான ஒரு பிரச்சினையாக இருக்கிறது. தமிழ்நாட்டில், தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு தமிழ் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பில் மிகப் பெரிய பின்னடைவு இருக்கிறது. எல்லா வாய்ப்புகளையும் வட மாநிலங்களிலிருந்து வரக்கூடியவர்கள் அடைத்துக்கொள்கிறார்கள் என்கின்ற ஒரு மிகப் பெரிய விமர்சனமும், மிகப் பெரிய கொந்தளிப்பும் மக்களிடம் இருக்கிறது.

2023 ஜனவரி 13] [திரு. ஜெ. முகம்மது ஷாநவாஸ்]

எனவே, இப்படிப்பட்ட சட்டங்களை நாம் வகுக்கும்போது, இதற்கு உருப்படியான ஒரு தீர்வைக் காணும்வகையில் நம்முடைய சட்டங்கள் அமைய வேண்டுமென்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். 'பூனைக்கு யார் மணி கட்டுவது' என்ற அடிப்படையில் இந்த அரசு இதைச் செய்யும் என்கிற நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் மக்களிடம் இருக்கிறது. அந்த நம்பிக்கையைக் காப்பாற்றக்கூடிய வகையில் நம்முடைய சட்டமுன்வடிவு அமைந்தால், இந்த ஆட்சி மிகப் பெரிய வரவேற்பைப் பெறும். இதற்கு மிகப் பெரிய வரவேற்பு இருக்கிறது. எனவே, இதை உணர்ந்து, மிக உணர்வுபூர்வமான இந்தப் பிரச்சினையில் இந்த அரசு, குறிப்பாக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீவிரமாக கவனம் செலுத்தி, இதற்கு தக்க தீர்வைத் தர வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கிற சூழ்நிலையைத் திருத்துவதற்காக இந்தச் சட்டமுன்வடிவு இங்கே அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது, இன்றைக்கு இதை நிறைவேற்றவில்லை என்றால், தமிழ் தேர்வே தேவையில்லை என்ற சூழ்நிலை வந்துவிடும். அதைத் தவிர்ப்பதற்காகவே இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறோம். இது, இறுதித் திருத்தம் என்று சொல்வதற்கில்லை. திருத்தத்திற்கான சட்டமுன்வடிவை எப்போதெல்லாம் பேரவை நிறைவேற்றுகிறதோ, அப்போதெல்லாம் திருத்திக்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்கிற கருத்துகளெல்லாம் உண்மையான கருத்துகள். அவற்றை ஏற்றுக்கொள்கிறோம்.

இன்றைய சூழலில், இன்றைக்கு இந்தச் சட்டமுன்வடிவு நிறைவேற்றப்படவில்லையென்றால், இரத்தான தமிழ் தேர்வு இரத்தானதாகவே ஆகிவிடும். மாண்புமிகு உறுப்பினர்கள் அதையா விரும்புகிறார்கள்? அவர்கள் அரசியல் வரலாறு நன்கு அறிந்தவர்கள், அனுபவம் பெற்றவர்கள். எந்தச் சட்டத்தையும் எப்போது வேண்டுமானாலும் இந்தப் பேரவைமுன் கொண்டுவந்து திருத்திக்கொள்ளலாம். Of course, Railway Recruitment Board எல்லாம் நம் கட்டுப்பாட்டில் இல்லை. அந்த வேதனைகளை அவர்கள் சொல்கிறார்கள். ஆனால், நமது கட்டுப்பாட்டில் உள்ள அனைத்துத் திட்டங்களையும், அனைத்துத் தேர்வுகளையும்

பொறுத்தளவில், அவர்கள் சொல்கின்ற கருத்துகளை முழுமையாக ஏற்றுக்கொண்டு, அவைகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் ஆலோசித்து, அவற்றிற்கேற்ப தக்க நடவடிக்கைகள் கூடிய விரைவில் எடுக்கப்படும் என்று கூறிக்கொள்வதுடன், இந்தச் சட்டமுன்வடிவு, இன்றைக்கு அவசியமாகத் தேவை என்பதையும் வலியுறுத்தி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3-ல், திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

2023 ஜனவரி 13] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 4/2023) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பிற்பகல் 12–50

(ஈ) தமிழ்நாடு கட்டடம் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு நிபந்தனைகள் மற்றும் பல்வகை முறைகள்) நீக்கறவுச் சட்டமுன்வடிவு, 2023

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2023 ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டடம் மற்றும் கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பு நிபந்தனைகள் மற்றும் பல்வகை முறைகள்) நீக்கறவுச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/2023), மாண்புமிகு தொழிலாளர் நலன்–திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*